ஞ

43 "ஸ்ரீமுதலியாண்டான் "ஸ்ரீ பாத தீர்த்தத்தின் பெருமை"

43)

கோவையூர் முழுவதும் சைவர்களே நிரம்பியிருந்தனர். அவர்கள் உடையவர் வருகையை அநாதரித்துக்கிடந்தனர். அவர்களைத் திருத்தத் திருவுள்ளம் கொண்ட உடையவர் முதலியாண்டானைப் பார்த்து "ஆண்டான், அவர்கள் நீர் எடுக்கிற துறையிலே திருவடிகளை விளக்கி வாரும்" என்று நியமித்தார். அவரும் அப்படியே செய்தார். அதனால் பரமபாவனமான தீர்த்தத்தைப் பருகியதால் அவ்வூரிலுள்ளவர்கள் அனைவரும் உள்ளம் திருந்தி உடையவர் திருவடிகளைப் பற்றினார்கள். அன்று தொடங்கி அவ்வூருக்கு "ஸ்ரீஸாளக்ராமம்" என்ற திருநாமம் ஏற்பட்டது.

43ஆ) அவர்களுக்குத் திருவடிகளிலே நித்யஸேவை உண்டாகும்படி தம்மை ஆஸ்ரயித்ததைக் கல்வெட்டிலே பொறித்து வைத்தார். எம்பெருமானார் அவர்களை அனுகூலராக அபிமானித்து, அங்கே வடுக நம்பிக்கு தர்சன தாத்பர்யங்களை அருளிச் செய்துகொண்டு சிங்கர் கோயிலில் சிலகாலம் எழுந்தருளியிருந்தார்.

"விஞ் சுபுகழ் ஆண்டானை வே(ப)லூர் செலவிடுத்தருளிப்
பஞ் சநாரணனை ப்ரதிட்டை பண்ணி நாரணப்பதியில்
அஞ் சலென்று தன்னடிமையாகும் ஐம்பத்திருவர்தமைக்
கஞ்மலராள் நாயகனைக் காத்திருமென்றே கழறா"

என்கிறபடி, முதலியாண்டானும் வேலூர் (பேலூர்) எழுந்தருளி அங்கிருந்த அனைவரையும் உடையவருக்கு உரியேராக்கித் திருத்தியருளினார்.

**44) பஞ் சநாராயண பிரதிஷ்டை**

முன்னர் எம்பெருமானார் தாம் திருநாராயணபுரத்தைப் புதுப்பித்ததும் அதையெடுத்து விஷ்ணுவர்த்தனன் என்கிற மன்னனைக் கொண்டு ஒரே முஹூர்த்தத்தில் தழைக் காட்டில் கீர்த்திநாராயணன் என்கிற வாழ்புகழ் நாராயணன், தொண்ணூரில் லக்ஷ்மீகாந்தன் என்கிற ஸ்ரீமந்நாராயணன், கதுகலத்தில் (தற்போதைய கடக் ) வீரநாராயணன், விஜயாபுரத்தில் விஜயநாராயணன், பேலூரில் கேசவனுக்கு அடுத்துள்ளதான நாராயண நாமத்தால் கேசவநாராயணன் என்கிற ப0 சநாராயணப் ப்ரதிஷ்டையளவும் செய்தருளின கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்து திருநாராயணபுரத்திற்கு மீண்டும் எழுந்தருளினார்.

**45அ) "கிணற்றின் கரையில் இருக்கும் செல்வப்பிள்ளையை ரக்ஷித்து வாரும்"**

பின்பு , தமக்கிருப்பிடமான திருவரங்கப் பெருநகருக்கு எழுந்தருளத் திருவுள்ளம் பற்றினார் உடையவர். திருவனந்தபுர தாஸரையும், ஸ்ரீ மாலாகார தாஸரையும், திருக்குறுங்குடி தாஸரையும், யதிராஜதாஸரையும் பார்த்து "செல்வப்பிள்ளை கிணற்றங்கரைப்பிள்ளை யாயிருக்கும். மங்களாசாஸனத்துடனே ஸதா தர்சனம் பண்ணிக்கொண்டு ரக்ஷகராயிருக்கக் கடவீர்" என்று ஆஜ்0 பித்தார். அவர்களும் உடையவர் திருவடிகளிலே விழுந்து, அவர் பிரியப்போகிறார் என்பதைக் குறிப்பால் உணர்ந்ததால், "தேவரீர் திருவடிகளைப் பிரிந்திருக்க முடியாது" என்று கண்ணநீர் பெருக்கி விண்ணப்பம் செய்தனர்.

45ஆ)"தமர் உகந்த திருமேனி"

அப்போது உடையவரும் "மாறன் அடிபணிந்து உய்ந்தவன்" (இராமாநுச நூற்--1) என்பது தோன்றும் படியாக, திருத்தோளில் திருமகிழ்மாலையும் திருவாராதனத்துக்குத் தகுதியாம்படி திருக்கைகளிலே சாத்தின உபயபவித்ரமும், ஸர்வாத்மாக்களுக்குமாக நாராயண ஶரணவரணம் பண்ணி அ0 ஜலி செய்யும் திருக்கரங்களோடு பத்மாஸனத்தில் எழுந்தருளியிருக்கிற தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்துக்குப்படி எடுத்ததுபோல் விளங்கும் அர்ச்சா விக்ரஹத்தை ஏறியருளப்பண்ணி, தம்முடைய திவ்ய சக்தியை அதிலே ப்ரதிஷ்டை செய்து ஒரு நிலைக்கண்ணாடியை அழைப்பித்துத் தம்முடைய விக்ரஹத்தையும் அர்ச்சா விக்ரஹத்தையும் பார்க்கும்போது இரண்டும் ஒரே வடிவுடன் ஒத்திருக்கக்கண்டு, " இதோ உங்களுக்காக நாம் இங்கே இருக்கிறோம்" என்று அருளிச்செய்து அத்திருமேனியை அவர்களுக்கு அடைக்கலமாகக் காட்டடியருளினார்.

45.இ) அவர்களும் அதனை மஹாநிதியாகக் கைக்கொண்டு உடையவர் திருவடிகளைத் தங்கள் திருமுடியிலும் திருமார்பிலும் திருவுள்ளத்திலும் தரித்துக்கொண்டு நின்றனர். உடையவர் அவர்களைப் பார்த்து.

"நல்வகையால் நமோ நாராயணாயவென்று நாமம் பல பரவிப்
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு கூறுவனே"(திருப்பல்லாண்டு -11)

"நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று
பல்லாண்டும் பரமாத்மானைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" (திருப்பல்லாண்டு—12)

என்றும் செல்வப்பிள்ளை விஷயமாகவும் திருநாராயணன் விஷயமாகவும்(திருவாய்மொழி 4-1 பதிகத்தை) மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டிருக்கக்கடவீர்" என்றருளிச்செய்தார்.

**46அ) ஐம்பத் திருவரின் பிரிவாற்றாமை**

உடையவரும ஒரு நாயகம் திருவாய்மொழிக்கு வியாக்யானம் அருளி அது நடந்து செல்லுகிற நாளிலே புறப்பட்டு ஸஹ்ய பர்வத்திலிருந்து திருக்காவேரியானது ஸ்ரீரங்க நகரை நோக்கிப் பெருக்கெடுத்துப் பரவுமாறு போன்று, யாதவாத்ரியிலிருந்து சிஷ்யப் பெருக்குடன் ஸ்ரீரங்கநகரை நோக்கி விரைந்தார். வழியிடையில் அவைதிக மதஸ்தரை அழித்துக்கொண்டும் பரமவைதிகரானவர்களை வாழ்வித்துக்கொண்டும் வழிபட்டு எழுந்தருளினார். அப்போது திருநாராயணபுரத்தில் நாரணன்தமராக நிறுத்தப்பட்டவர்களாய் இராமாநுசமுடையாராய் எழுந்தருளியிருக்கிற மேல்நாட்டி லுண்டான ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானார் என்கிற பெரிய ஏரியைப் பிரியாமல் நாலுமூன்று பயணங்கள் உடன் ஸேவித்துக் கொண்டுவர இராமானுசனும் அவர்களை நிர்ப்பந்தித்து நிறுத்தி பெரும்புறக்கடலான திருநாராயணனை நித்யஜீவனமாகக் காட்டியருளினர்.

47அ) அவர்களும் வருத்தத்துடன் திருநாராயணபுரம் சென்று விடாய்த்தவன் வெறுங்குளத்திலே விழுந்தது போன்று மிகவும் பரிதபித்துத் தாங்களாகவே தேற்றிக்கொண்டு

"அநந்த0 ப்ரதம ரூபம் லக்ஷ்மணஶ்ச தத0 பரம்
பலபத்ரஸ் த்ரிதீயஸ்து கலௌ கஶ்சித் பவிஷ்யதி"

(முதல் அவதாரம் திருவனந்தாழ்வான். இரண்டாவது அவதாரம் இளையபெருமாள். மூன்றாவதோ பலராமன். குலியுகத்தில் யாரோ ஒருவராக அவதரிக்கப்போகிறார்)

47ஆ) "கலியும் கெடும்"

என்றும் "கலியும் கெடும் கண்கொண்மின்" (திருவாய்மொழி 5-2-1) என்கிற விஷயத்தையும் இங்கே காணப்பெற்றோம்! இவர்தாமே முன்பு க்ருதயுகத்தில் திருநாராயணனை ஸ்வயம் திருவனந்தாழ்வானாய்த் திருவாராதனம பண்ணியும்0 த்ரேதாயுகத்தில் பெருமாளும் பிராட்டியும் "நாராயணமுபாகமத்" என்று சென்று அடிமை செய்யுமிடத்து இளைய பெருமாளாய் தாமும் எடுத்துக்கைந்நீட்டி அடிமை செய்தும்' த்வாபரயுகத்தில் தீர்த்த யாத்ர வ்யாஜத்தால் நம்பிமூத்தபிரானாய் வந்து ஆராதித்தும், கலியுகத்திலே இராமானுசனாய்த் திருநாராயணனுக்கு அனைத்து அழகும் கண்டருளப்பண்ணி அடிமை செய்து போந்தார் என்றும் உடையவராலே ஸமர்ப்பிக்கப்பட்ட "ஒரு நாயகத்தையம்" அநுஸந்தித்துக் கொண்டு அவர் நியமித்தருளின கைங்கர்ய்ததையும் செய்து கொண்டு

"செம்பொன் திருவமைந்த செல்வப்பிள்ளையாம் அவனை
ஐம்பத்திருவர் தம் அடைக்கலமா வைத்தாரோ !
திருவரங்கம் கேரியில்தனை நோக்கிச் சிறப்புடனே
யதிகளுடன் ஆரியர்கள் சூழ்ந்திறைஞ்சும் வேதியனோ !

என்று இராமானுசனுக்கு மங்களாசாஸனம் செய்து கொண்டிருந்தார்.

**48அ) "தமர் உகந்தது எவ்வுருவம் என்பதை நடைமுறையில் காண்பித்துக் கொடுத்த இராமானுசன்"**

ஆழ்ர்கள அருளிச் செய்த ஈரச்சொற்களாகிய அரளிச்செயல்களிலேயே பொழுதினைப் போக்கி வந்தார் எம்பெருமானார். எம்பெருமானாரின் செயல்களால் சிறு குழந்தைகளிடம் கூட விஷ்ணு பக்தி வளர்ந்து வந்தது. தெருவிளையாட்டில் கூட அரங்கனே அவர்களின் கருப்பொருளாகிய விளங்கி வந்தான். ஒரு சமயம் எம்பெருமானார்,

"தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர் தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்" (முதல் திருவந்தாதி—44)

என்ற பொய்கையாரின் பாசுரத்தைச் ஸேவித்துக்கொண்டே திருவரங்க வீதிகளில் வந்து கொண்டிருந்தார்.

48 ஆ) அப்போது நாலைந்து பிள்ளைகள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தனர். எம்பெருமானாரைக் கண்ட அவர்களில் ஒருவன் மண்ணில் சில கோடுகளைப் போட்டு, "ஜீயரே! இதுதான் கோயில்!" என்றான். மற்றொருவன் மேலும் சில கோடுகளைப் போட்டு" இதுதான் கர்ப்பக்கிருஹம் என்றான். வேறொருவன் இன்னும் சில அகதாடுகளைப் போட்டு ஜீயரே ! இதோ இவர்தான் பெரிய பெருமாள் ! ஸேவியும் ! என்றான். ஏம்பெருமானாரும் மண்ணில் நெடுஞ் சாண்கிடையாக விழுந்து ஸேவித்தார். ஸேவித்து எழுந்தபோது இன்னொருவன் ஒரு கொட்டாங்குச்சியில் சிறிது மண் எடுத்து, ஜீயரே இந்தாரும் பெருமாள் பிரசாதம் பெற்றுக்கொள்ளும் எனத் தர, அதனை மிகவும் பணிவுடன் தமது செநுகாவி மேலாடையில் பெற்றுக்கொண்டார்

எம்பெருமானார் எனில் அவரது அனுபவப் பிரபாவத்தை என் என்பது ? பிள்ளைகளோ பெரியவர்களோ, கல்லாரோ கற்றாரோ, கீழ்வகுப்போ மேல்வகுப்போ, எளியாரோ செல்வந்தரோ, எல்லோரையும் ஒரே நோக்கு என்ற பெருநோக்குடன் பார்க்கும் பரந்த மனம் அவரிடமிருந்தது. அது அவரது செயல்களால் வெளிப்பட்டது.

### 49 அ) பங்குனி உத்தரமும் இராமானுசரின் சரணாகதியும்

எம்பெருமானார் இவ்வுலக மக்களுக்காக நம்பெருமாளிடம் சரணாகதி செய்தார். அதற்காகப் பெருமாளும் பிராட்டியும் சேர்த்தியில் இருக்கும் பங்குனி உத்தரத் திருநாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். எத்தன்மை படைத்தவர்களும் எம்பெருமானின் திருநாமத்தைச் சொல்லிச் சரணடைந்தால் எளிதில் வீடுபேற்றினை அடையலாம் என்ற நம்மாழ்வார் அரளிச் செய்தபடி சரணாகதி கத்யம். ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீ வைகுண்டகத்யம் எனப்படும் கத்யத்திரயங்களை அருளிச்செய்தார்.

49ஆ) நம்பெருமாள் உறையூர் சென்று உறையூர் நாச்சியாருடன் தங்கித் திரும்பியதால் நம்பெருமாளிடம் பிரணய கலகம் ஏற்பட்டுப் பெரிய பிராட்டியார் ஊடல் கொண்டார். நம்மாழ்வாரின் தலையீட்டால் பிராட்டியின் ஊடல் நீங்கிற்று. ஊடல் நீங்கிய நாளும் பிராட்டியின திருஅவதார தினமுமான ப்ஙுனி உத்தரத்தன்று நம்பெருமாள் பெரிய பிராட்டியோடு திருமஞ் சனம் கண்டருளும்முன் சேர்த்தியில் மிகவும் உவகையுடன் எழுந்தருளியிருந்தார்.

49இ) அத்தருணமே சரணாகதி பண்ண மிகவும் உகந்த தருணம் என்று தீர்மானித்துப் பெரியபிராட்டியை முன்னிட்டு நம்பெருமாளிடம் சரணாகதி செய்து, சரணாகதி செய்தோருக்கெல்லாம் வீடுபேற்றினை நல்கிட வேண்டி நின்றார் எனில் எம்பெருமானாரின் கருணை உள்ளத்தை என் என்பது? வீபிஷணனின் பின்னால் வந்தவர்களின்தகுதி விசாரிக்கப் படாதது போல் இராமானுசரின திருவடி சம்மந்தம் உடைய அடியவர்களின் தகுதிகள் விசாரிக்கப்படாமலேயே சரணடைந்த அவர்கட்கு வீடுபேறு உறுதி ஆயிற்று.

சரணுகதி பண்ணிய பின்னா ஒருவன் எ்வவாறு இருக்கவேண்டுமென்று தாமே கடைப்பிடித்துக் காட்டினார் எம்பெருமானார். பகவானை ஆராதிப்பதற்கு நித்யம் என்ற அனுஷ்டானக் கிரந்த்தத்தையும் அருளினார்.

### 50) இராமானுசரைப் பற்றினார்க்குப் பேறு தப்பாது.

சுரணாகதி கத்யம் நாலாவது சூர்ணைக்குஸூதர்சன பட்டர் அருளிச்செய்த வ்யாக்யானத்தில் "ஸ்வஸம்பந்தி ஸம்பந்திநிஸ்தரணமபி ஸர்வஶப்தாபிப்ரேதம் " என்று குறிப்பிட்டுள்ளார். "ஸர்வம் ஸம்பத்ஸ்யதே என்று பிராட்டி அருளுகையாலே எம்பெருமானாரோடு ஸம்பந்தமுடையவர்களுக்கும் பேறு உண்டு என்று உணர்த்ப்படுகறது.

### 51) திருமலையில் அவதரித்த வேதார்த்த ஸங்க்ரஹம்

திருவேங்கடமுடையான் திருமுன்பு அருளிச்செய்யப்பட்ட கிரந்தம் வேதார்த்த ஸங்க்ரஹமாகும். இதனை ஸூதர்சன பட்டர் தாம் அருளிச்செய்த தாத்பர்யதீபிகையில பின்வருமாறு குறிப்பிட்டுள்ளா.

"ஸ்ரீபாஷ்யக்ருதுபந்யஸ்த 0 ய0 ஸ்ரீஶைலபதே0 புர 0

வேதார்த்தஸங்க்ரஹஸ்யாஸ்ய குர்வே தாத்பாயதீபிகாம்"
(திருமலையப்பனான திருவேங்கடமுடையான் திருமுன்பே ஸ்ரீ பாஷ்யகாரரலாலே உபந்யாஸமாகச்
செய்யப்பெற்ற வேதார்த்த ஸங்க்ரஹத்திற்குத் தாத்பர்யதீபிகை என்னும் வ்யாக்யானத்தைச் செய்கிறேன்.)

### *52) இரமானுசரின் திருவாய்மொழிப்பேருரைகள்*

*"அந்தாமத்து அன்புசெய்துஎன் ஆவிசேர் அம்மானுக்கு*
*அம்தாமம் வாழ்முடி எந்கு ஆழி நூல் ஆரம் உள" (திருவாய் -2-5-1)*

*என்பதற்கு " அடியார்கள் குழாந்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று அவர் ஆசைப்பட்டபடியே நித்யசூரிகளோடு வந்து கலந்தான் என்று கூறி ஆழி, நூல். ஆரம் என்று நித்திய ஸூரிகளைக் கூறுவதற்குகாரணம் அவர்கள் அறிவுடையோராக இருந்தாலும், அவனுக்குகந்தவாறு தொண்டு செய்தலாகிய பேற்றினைப் பெறுவதற்காகத் தந்களை அப்பொருள்களாக அமைத்துக்கொள்கின்றனர் என்று விளக்கமும் தந்தார் ஆளவந்தார்.*
*இராமானுசர் இத்துணை இடர்ப்படாமல், ஆழ்வாரோடு கலப்பற்கு முன்பு இறைவனைப் போன்றே ஆழி, நூல், ஆரம்' முதலியனவும் ஒளியிழந்தனவாய் இருந்தும் இல்லாத பொருளுக்கு ஒப்பாக (சத்தையற்றபொருளுக்குச்சமமாய்) இருந்தன. ஆழ்வாரோடு கலந்த பின்பு ஒளிப்பொருளாகி உளதாந்தன்மை (சத்தை) பெற்றன. ஆதனையே இந்கு ஆழ்வார் தெரிவிக்கிறார் என்று விளக்கினார்.*

### *53) இராமானுசரும் தமிழ் அக இலக்கியக் கோட்பாடுகளும். "இன்றியமையாமை" என்றால் என்ன பொருள்?*

*திருவாய்மொழி 6-1-10 விளக்க உரையில் என்னையும் உளன் என்மின்கள், என்ற சொற்றொற்கு இராமானுசர் அருளிய அரும்பொருள் ஒன்று இடம் பெற்றுள்ளது.*

***என்னையும் உளன் என்மின்கள்'*** *இன்னமும் நோவு படுகிறார் உண்டு என்றுசொல்லுந்கோள். இதற்கு, "இத்தலையைப பிரிந்தாரில் இருப்பார் இல்லை என்று இருக்கையாலே வாராது ஒழிந்தார் அத்தனை' இத்தலையில் சத்தை உள்ளமையை அறிவியுந்கோள்" என்று ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிப்பர். இதனை, எம்பெருமானார் கேட்டருளி, " அழகிது ஆகிலும், இன்றியமையாமை என்று தமிழரது ஒரு பிரவாதம் (பொதுவான வார்த்தை) உண்டு' அதாகிறது, ஒருதலை உண்டானால் ஒருதலை இன்றிக்கே இராது, இரண்டு தலையும் உண்டாதல், இரண்டு தலையும் இன்றிக்கே ஒழிதல் இத்தனையாயிற்று. அதில், தாம் உளராகையால் இத்தலையும் உண்டு என்கை உறுதி' ஆனபின்பு, பிரதி கூலித்தாரைக் கிழந்கு எடுத்துப்பொகட்டு அநுகூலித்தார் தலையிலே முடியை வைத்துக் கிருதக் கிந்தயராய், இனிச்செய்ய வேண்டிய குறை ஒன்றும் இல்லை" என்றிருக்கிறவர்க்கு, இன்னமும் ரக்ஷ்யவர்க்கம் ஒன்று உண்டுஎன்று சொல்லுந்கோள் என்கிறாள் என்று அருளிச்செய்தார்.*

*(இன்றியமையாமை' தலைவியினது இன்றியமையாமை யைத் தரைவன் கூறுதல் இவளைப் பிரிந்து இவள் இல்லாமல் என்னால் ஒருக் கணமும் உயிர்வாழ்தல் இயலாது என்ற தலைவன் இயற்கைப் புணர்ச்சி இறுதியில் தன்னுள் கூறிக் கொள்வது. இது களவியலுள் 'வன்புறை'என்னும் தொகுதிக்கண்ணதொரு கூற்று)*

**54) சாயை போலப் பாடவல்லார் தாமும் அணுக்கர்களே**

*எம்பார் இராமானுசர்மாட்டுக்கொண்டிருந்த மதிப்பு எல்லையற்றது' வியப்புக்குரியது. இவரிடம் 'சாயைப் போலப் பாடவல்லலார் தாமும் அணுக்கர்களே என்னும் பெரியாழ்வார் திருமொழிக்குச்(5-4-11) சிலர் பொருள் சொல்ல வேண்டினர். அதற்குஇவர், "இதனை யான் உடையவர் திருவடிகளிலே கேட்டறியேன். நீங்கள் கேட்பதற்குத் தெரியாது ஏ்னறு கூறுவது தாகது. இப்பொழுதே அவரைக் கேட்டுச் சொல்லலாம் என்றாலோ அவர் திருக்கோட்டியூர் நம்பியைக் சாணச் சென்றுள்ளார். எனினும் உங்களுக்கு இப்பொழுதே சொல்லுகிறேன்" என்றார். இராமானுசரின திருவடி நிலைகளை- (மிதியடிகளை)- எடுத்துத் தம் தலையிலே வைத்துக்கொண்டு அத்திருமொழித் தொடரைப் பாடவல்லார் - சாயைபோல – தாமும் அணுக்கர்களே' என்று கூட்டிப் பொருள் உரைத்தார்.*

**55அ) "இராமானுச நூற்றந்தாதி" அவதரித்த வரலாறு**

*திருவரங்கத்து அமுதனாரும் ஆழ்வான் திருவுள்ளம் உகக்குமாறு இராமானுசன் விஷயமாக ஒன்றிரண்டு ப்ரபந்தங்கள் இயற்றி அவற்றை உடையவர் ஸந்நிதியில் கொண்டு போய் வைத்தார். உடையவரும் அவற்றை அவிழ்தது ஏடுகளைப் புரட்டி முழுக்கத்திருக்கண் சாத்தியருளி அவை தம் இயல்புக்கு ஏற்காதபடி இருந்ததால் அவற்றைக் கிழித்துவிட்டு, அமுதனாரைப்பார்த்து "உமக்கு ஒரு ப்ரபந்தம் சொல்ல வேணும் என்று நிர்ப்பந்தமுண்டானால் உமக்கு உத்தேச்யரான ஆழ்வானுடையவும் நமக்கு உத்தேசயரான ஆழ்வார்களுடையவும் உகந்தருளின நிலங்களுடையவும் ஸம்பந்தம் தோன்றும்படி ஒரு ப்ரபந்தம் செய்யும்" என்று நியமித்தருளினார்.*

*55ஆ) அமுதனாரும் அப்படியே செய்கிறேன் என்று குலமுனிவன் கூறிய நூல் (கண்ணிநுண் சிறுத்தாம்பு) என்னும்படி அதனை உள்ளுறையாகக் கொண்டு விப்ரர்க்கு (அந்தணர்க்கு) நூற்றெட்டு காயத்ரிபோல் ப்ரபந்த ஜனங்களுக்கு நூற்றெட்டு ஸாவித்ரியாக உரு எண்ணத்தக்கதாய், விஷ்ணு காயத்ரியில் நாராயண நாமம் மேலானது போல் இங்கு அதைக் காட்டிலும் மேலானதான இராமானுசன் என்னும் திருநாமத்தைப் பாட்டுக்கள் தோறும் நாட்டி நூற்றெட்டுப்பாடி உடையவர் ஸந்நிதியில் வைத்து ஸேவித்து நின்று திருச்செவிசாத்தும்படி விண்ணப்பம் செய்து அநுமதி பெற்று, ஆழ்வான் முதலானவர்கள் பேரோலக்கமாக ஸேவித்துக்கொண்டு நிற்கும் கோஷ்டியில் விண்ணப்பம் செய்தார்.*

*55இ) "தன் சரிதைக் கேள்விபோலே" (பெருமாள் ததருமொழி 10-8) செவிக்கினிய அந்த ப்ரபந்தத்தை உடையவர் திருச்செவி சாத்தித் தலையசைத்துப் புகழ்ந்து பாராட்டி யருளித தம் திருவடிகளில் ஸம்பந்தமுடையார்க்கெல்லாம் அன்று தொடங்கி நித்யம் அநுஸந்திக்கக் கடவது என்று கற்பித்தருளினார். குறும் ஸாவித்திரிபோல் பத்தாயிருக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்புடு நெடும் ஸாவித்ரிபோல நூற்றெட்டாயிருக்கும் இது. அதையொட்டியே.*

*இனியென் குறை நமக்கு எம்பெருமானார் திருநாமத்தால்*
*முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரி என்னும் நுண்பொருளை*
*கனிதந்த செஞ்சொல் கலித்துறையந்தாதி பாடிதந்தான்*
*புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே (இராமானுசநூற்றந்தாதி தனியன்)*
*என்று வேதப்பிரான் பட்டரும் அறுதியிட்டார்.*

## 56) ஸ்ரீ வைஷ்ணவர்கள் சிவனை ஏன் வழிபடுவதில்லை ?

அரசர் குலத்தில் தோன்றிய, எம்பெருமானார் சிஷ்யையான திரிபுரா தேவியாரைச்சிலர் "நீர் மற்ற தெய்வங்களைக் கைவிட்டுப் புறந்தொழாமையைக் கடைப்பிடிக்கக் காரணம் என்ன ? என்று கேட்க, அதற்கு அவர் மற்ற தெய்வங்களின் பெயரையும் தன் நாவால் சொல்லக் கூசி, "பழைய சோற்றுப் பானையை வைக்கும் (வடகிழக்கு) மூலைக்குத் (ஈசான்ய திக்குக்குக்) திக்பாலகரான தெய்வத்தையும் ஆச்ரயிக்கத்தக்கதென்று எங்கள் ஆசார்யரான உடையவர் அருளிச்செய்தாராகில் நானும் அதை ஆச்ரயிக்கத்தக்கதாகக் கொண்டிருப்பேன் என்றாள்.

## 57) இராமானுசருடனான உறவை அறுத்துக் கொண்டு பெரிய பெருமாள் அஸவை தேவையில்லை என்று அறுதியிட்ட கூரத்தாழ்வான்

உடையவர் கிருமிகண்டன் உபத்திரவத்தாலே வெள்ளை சாத்திக்கொண்டு திருநாராயணபுரத்தை நோக்கி எழுந்தருளின காலத்தில், கிருமிகண்டன் " எம்பெருமானார் ஸம்பந்தமுடையவர்களைப் பெரியபெருமாள் கோயிலுக்குள் விடக்கூடாது" என்று உத்தரவு போட்டிருந்தான். இது தெரியாமல் ஆழ்வான் பெரியபெருமாளை ஸேவிக்க வந்தார். அப்போது ஆர்யபட்டாள் வாயிற்காப்போர்,"இப்படி உத்தரவு இருந்தபோதிலும் நீர் எல்லோருக்கம் நல்லவராயிருக்கும் நற்குணமுடையவர். ஆகையால் நீர் சென்று ஸேவிக்கலாம்" என்று அனுமதித்தார்கள். அதுகேட்ட அறிந்த ஆழ்வான் "நல்ல ஆத்ம குணங்கள் மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லும் என்று நினைத்திருந்தோம். எம்பெருமானார் திருவடிகளில் ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் பெரிய பெருமாள் ஸேவை எனக்குத் தேவையில்லை என்று கோயிலிலிருந்து திரும்பிவிட்டார் ஆழ்வான். இதிலிருந்து ஆசார்ய ஸம்பந்தத்திற்குத் தடையான பகவத் ஸம்பந்தமும் கைவிடத்தக்கது என்று விளங்குகிறது.

• ,,,,

## 58) "திருமலையில் அழகப்பிரனார் கிணறு"

ஆளவந்தார் ஒரு காலவிசேஷத்தில் திருவேங்கடயாத்ரை செய்தருளி, மங்களாசாஸனம் செய்தருளின போது ஒருநாள் ப்ராத 0 காலத்திலே அழகப்பிரானார் ஸ்நபநத்திற்கு உதவும்படி திருமலைநம்பி பாபவிநாசத்திலேயிருந்து திருமஞ்சனம் கொண்டு வருகைக்கு அப்போது பெய்த பெருமழையின் காரணமாக கூடாமலிருக்க, அப்போது ஆளவன்தார் தாமே ரங்கதாஸன் கைங்கர்யமான கிணற்றில் நின்றும் திருமஞ் சனம் எடுத்துச் ஸமர்ப்பித்துத் திரும ஞ்சனம் கொண்டருளப் பண்ணி, அந்தக் கிணற்றுக்கு "அழகப்பிரானார்' என்று திருநாமம் சாத்தினார்' என்னும் கதை ஸ்தலத்திலே பிரசித்தமாய் இருக்கையாலே, இத்தை எம்பெருமானார் கேட்டருளி, நம்முடையார் எல் லோரும் அந்தக் கிணற்றை அழகப்பிரானார் என்றே சொல்லக்கடவர்கள் என்று கட்டளைபண்ணினார்.

## 59) திருமலை திருக்கோயிலினுள் அழகிய சிங்கரைப் பிரதிஷ்டை கண்டரளிய இராமானுசர்

திருமலையில் அழகியசிங்கர், லக்ஷ்மீவிசிஷ்டராகாமையாலலே உக்ர மூர்த்தியாகையாலும் இவர்க்கு நித்யாராதனம் லுப்தமாம்படி அப்ரஸித்தராக்கி வைத்த வ்ருத்தாந்தங்களை எம்பெருமானார் கேட்டருளித்திருவுள்ளத்திலே சிந்தித்து, இவர், புராண ப்ரஸித்தராகையாலும், ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கு விஷயமாகையாலும் இவருக்கு

நித்யாராதனம் சரிவர நடைபெறவில்லையானால் ்ஸதலத்துக்கு கேடுவிளைவிக்கும் என்றெண்ணி, இவர் தனிக்கோயிலிலே இருக்கையாலேயன்றோ, இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்று எண்ணி, இவருக்குத் திருவேங்கடமுடையான் கோயிலிலே தான் எழுந்தருளியிருக்கும்படி நிச்சியித்து, ஸ்வாமிக்கு ஈசான்யதிக்பாகத்திலே உக்ரவேஷம் குறையும்படியாக விமாநாபி முகமாய் ப்ரதிஷ்டை பண்ணி, நரஸிம்ஹ அர்ச்சனம் உண்டான ஸ்தலத்திலே கேடு ஏதும் வாராது என்கிற சாஸ்த்ரார்த்தத்தையும் உட்கொண்டு நித்ய திருவாராதனம் நடக்கும் படிக்கும், பண்ணி வைத்தார்.

**60) திருமலையில் மார்கிழி மாதம் முழுவதும் கிருஷ்ணனே சயனம் கண்டருளும் படியான முறையை ஏற்படுத்தினார் இராமானுசர்**

திருவேங்கடமுடையான் ஸந்நிதியிலே ப்ரதிதினம் சயன பேரரைத் திருப்பள்ளிக் கட்டிலிலே கண்வளர்ந்தருளும்படி ஸ்ரீ வைகாநஸ ஆகமத்தில் இருந்தபடியே கொண்டருளினாலும், முன்பு, ஆழ்வார் திருமகள் கிருஷ்ணனோடு அனுபவத்ததை ஆசைப்பட்டு மார்கழி மாஸம் முப்பது நாளிலும், நித்யம் ஒரு பாட்டாக முப்பது பாட்டான ப்ரபந்தத்தை அருளிச்செய்கையாலும், " வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே" என்ற, இதர அர்ச்சாவதாரங்களைவிட்டு ்ப்ரதமம் திருவேங்கடத்தானையே விரும்புகையாலும், விபவ, அர்ச்சா வதாரங்களுக்கு ஐக்யம உண்டாகையாலும், ஸ்ரீ வைகாநஸாகமத்திலே, ஒரு ஸம்ஹிதையிலே மார்கழி மாதமெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணன்தானே ச்யயா (சயன) பேரமாய் இருக்கும் படிக்கு விதி காண்கையாலும், பேரத்தரய பக்ஷத்திலே கிருஷ்ணனே சய்ய(சனயன) பேரமாக விதிக்கையாலும், மார்கழி மாதம் ம்பபதுநாளிலும் கிருஷ்ணன் தானே திருப்பள்ளிக் கட்டிலிலே கண்வளர்ந்தருளி ஜகத்தை வாழ விக்கும்படி செய்தார் எம்பெருமானார்.

**61) திருமலையில் " ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா "**

திருவேங்கடமுடையானும் ஒரு பக்தன் மேலே ஆவேசித்து, "நாம் ராமாவதாரத்திலே வஸிஷ்டாதிகளை ஆதரித்தாப்போலே, நம்முடைய ஸர்வ ஸ்மாத்பரத்வத்தை ஸ்ரீ பாஷ்ய நிர்மாண முகத்தாலே உண்டாக்கின ஸ்ரீ பாஷ்யகாரர் நியமனத்தையும் ஆதரிக்கிறோம்' நம்மைப் பற்றினவர்களெல்லாரும் இந்த எம்பெருமானார் நியமனத்தை ஆதரிக்கக் கடவர்கள்" என்று அருளிச் செய்ய, பின்பு எல்லாரும் இந்தப் பகவதநுக்ரஹத்தைக்கேட்டு
ஸந்துஷ்டராயிருக்க, அப்போது திருவேங்கடமுடையான் ்தருவுள்ளத்துக்கு அந்தரங்கரான செங்கனிவாயன்
என்பாரொரு அர்ச்சகர்ஸ்ரீ சடகோபனை எடுத்து எல்லார் தலையிலும் வைத்து, பரம ரிஷிகளான
பல பாகவதர்கள் இந்த ்ஸதலத்திே ல நன்முறைப்படுத்தப்பட்டதாய் திருவேங்கடமுடையானுக்கு
மிகவும் ்உகப்பான இந்த ஆசார மரியாதையை இந்தத் திருமலையிலே அநுஷ்டியாதவர்கள ஸ்வாமியினுடைய திவ்யாஜ்ஞா ரூபமான வேதத்துக்கு வெளிப்பட்டவர்கள்என்று திவ்யாஜ்ஞா யிட எல்லாரும்அங்கீகரித்தார்கள்.

**62)" திருமலையில் அனத்யயனம் எந்த நாள் வரை ?"**

திருமலை திருப்பதி ஆகிய இரண்டு ்ஸ்தலங்களும் ஏகமென்று எம்பெருமானார் தாமே நியமித்தார்என்று (

ஐதிஹ்யமிருக்கையாலே திருப்பதியிலே கோவிந்தராஜன் அத்யயனோத்ஸவம் கொண்டருளுமளவும் திருமலையிலே ஸ்ரீ வைஷ்ணவர்கள் திருமாளிகையிலே திவ்யப் பிரபந்தங்களுக்கு அதயயன அத்யாபனங்கள் இல்லை.

## 63) "மாமேகம் சரணம் வரஜ" என்று தேவையிடாதவர் எழுந்தருளினார்

எம்பெருமானார் திருவாராதனம் பண்ணிப் போருவது வெண்ணெய்காடும் பிள்ளையாய் இருக்கும். இந்நுனமிருக்கவும், ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்கரவர்த்தி திருமகனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து கொடுத்தாராய் அவரைப் பார்த்து, இந்த 'என் ஒருவனையே சரணமாக்ப பற்று என்று தேவையிடாதர் எழந்தருளினார்'' என்றாராம். நம்பிள்ளை ஈடு 5-7-7 பாசுர விளக்கத்தில் இந்தக் குறிப்பு அமைந்துள்ளது.

## 64) "எம்பெருமான் அடியாள் "வீட்டுவாசலில் இராமானுசர் தாலாட்டு கேட்ட நின்ற எம்பார்

ஒரு நாள் ஸ்ரீ கோவிந்தப் பெருமாள் எம்பெருமானடியாள் வாயிலிலே நிற்கக்கண்டு, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உடையவர் கோஷ்டியிலே அத்தை வெளியிட உடையவரும் 'கோவிந்தப்பெருமாளே ! நீர் அங்கே நிற் பானென்? என்ன, இவரும் தேவரீர் தாலாட்டு மதுரமாய், இசையேறிச் செவிக்கினிய செஞ்சொல்லாயிருக்க தேவரீர் குணாநுபவமும் முன்னடி வளையக் கட்ட போக்கடியற்று நின்றேன்' என்று விண்ணப்பஞ் செய்ய, ஸ்ரீ வைஷ்ணவரும் தாலாட்டு நடந்தது உள்ளது' என்ன, உடையவரும் இவர்ப்ராவண்ய மிருந்தபடி என் ! என்று உகந்தருளினார்.

## 65) வடுகநம்பியின் " அடாதசெயலும்' அதற்கு அவர் அளித்த விளக்கமும்

எம்பெருமானார் திருவடிகளே உபாயோபேயம் என்ற உறுதிப்பாட்டினைக் கொண்டு அவர் திருவடி நிலைகளையே திருவாராதநம் பண்ணிப்போருவர் வடுகநம்பி. இப்படியிருக்கிற வடுக நம்பி, ஒரு பயணகதீயலே உடையவர் திருவாராதநத்தையும் தம்முடைய திருவாராதநத்தையும் சேரவெழுந்தருளப் பண்ணிக் கொண்டுவர, உடையவர் கண்டு 'வடுகா இது என் செய்தாய் ? என்ன, இவரும் 'உங்கள் தேவரில் எங்கள் தேவருக்கு வந்த குறை என் ? என்று விண்ணப்பஞ் செய்தார். வடுகநம்பி உடையவருடன் பெருமாளை ஸேவிக்கப் போனாலும் உடையவர் விக்ரஹத்தையே ஸேவித்துக் கெர்ணடு போருவர் ஒரு நாள் எம்பெருமானார் இத்தைக் கண்டு பெரியபெருமாளுடைய திருக்கண்ணழ கைப்பாராய்' என்ன, இவரும் பெருமாள் திருக்கண்ணழகையும் உடையவர் திருக்கணழகையும் பார்த்து என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்ன உடையவரும் 'இதொன்றிருந்தபடி என் ! என்று உகந்து, வடுக நம்பியைப் பூர்ணகடாக்ஷம் செய்தருளினார்.

வடுகநம்பி எம்பெருமானார் அமுது செய்தருளிய தளிகை ப்ரஸாதம் ப்ரஸாதித்தால் இரண்டு திருக்கையாலும் ஏற்றுக்கொண்டு ப்ராஸாதஸ்வீகாரம் பண்ணித் தம் திருமுடியிலே திருக்கைகளைத் தடவிக்கொண்டு போருவர்' இத்தை ஒரு நாள் உடையவர் கண்டு கனக்கக் கோபித்து வடுகா ! கையைக் கழுவிக்கொள் என்ன, கழுவிக்கொண்டு, மற்றைநாள் நம்பெருமாள் அமுதுசெய்தருளுகிற காலத்தில் உடையவருடன் சென்றளவிலே உடையவரும் தமக்கு ப்ரஸாதித்த பெருமாள் ப்ரஸாதத்தைத் தாமும் ஸ்வீகரித்தருளி வடுகா ! இதோ என்று இவருக்கும் ப்ரஸாதிக்க இவரும் இரண்டு திருக்கைகளாலும் ஏற்றுக்கொண்டு ப்ரஸாதப்பட்டு, ஸ்ரீ வைஷ்ணவர் திருக்கைவிளக்க ப்ரஸாதிக்கத் திருக்கை விளக்கிக்கொண்டார். உடையவர் இது கண்டு

" இதென் செய்தாய்? வடுகா ! என்ன. "நேற்று அருகிச்செய்தபடி செய்தேன்" என்றார். உடையவரும் இது கேட்டு "உமக்குத்தோற்றோம்" என்று அருளினார்.

### 66) கூரத்தாழ்வான் பிரிவில் அவருக்கு "த்வயத்தின்" பொருளை அருளிச்செய்த இராமானுசர்

"வைகுண்டே தத்ர கூரேஶ ந ஶாஸ்த்ரம் நைவ சக்ரம்0 (ப்ரபந்நாம்ருதம் 57.29) (கூரத்தாழ்வான்! அவ்வைகுண்டத்தில் சாஸ்திரவிதியும் முறையும் கிடையாது.) என்று அடைவுகெட்டிருக்கும் போக விபூதியிலே நீர் அடைவு டேுவதே ! இதொரு ஶேஷத்வம் இருந்தபடியே ! என்று போர வித்தராய்த் திருமுத்துதிர்த்து, இவர்க்கு ஓடுகிற நினைவையறிந்து இவர் செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய, முதலிகளும் இப்போதாக இதுவென்? என்ன, 'நீங்கள் அறியீர்களோ? ராஜ

என்ன 'நீங்கள் அறியீர்களோ? ராஜகுமாரனுக்குக் கர்ப்பூரநிகரமில்லாதபோது நாக்கு வறளும்' என்று அருளிச்செய்து, ஆழ்வானை அணைத்துக் கொண்டு விம்மல் பொருமலாய்த் திருவுள்ளம் உடைகுலைப்பட்டு ஆழ்வான்! என்னுயிர் நிலையான உம்மையிழந்து எங்ஙனே தரிப்பேன்? என்னையும்உடன் கொண்டுபோகத் தீருவுள்ளம் பெற்றிலீர் நம்மை விட்டுப்போக உமக்கு ருசிப்பதே ! பரமபதநாதனும் அங்குள்ள நித்ய முக்தரும் என்ன பாக்யம் பண்ணினார்களோ ? .இங்கு உறங்குகிற பெருமாளும் இங்கு உள்ள நாங்களும் என்ன பாபம் பண்ணினோமோ? உம் திருவுள்ளங்கலங்கச்சொல்லி என் ப்ரயோஜநமுண்டு? உம்பேற்றுக்கு நாம் விலக்கடியாகலாமோ? ஸுகமே நித்யவிபூதியேற எழுந்தருளீர் விடை கொடுத்தருள, ஆழ்வானும் உடையவர் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து கிடக்க, உடையவரும் இரண்டு திருக்கைகளாலும் வாரியெடுக்க, எழுந்திருந்து உடையவர் திருவடிகளைத் தம் திருக்கண்களிலும் திருமார்பிலும் ஒற்றிக்கொண்டு ஶிரோ பூஷணமாக்கிக் கொண்டு தீர்த்தங்கொள்ள உடையவரும் திருக்கைகளாலே ப்ரஸாதிக்க ப்ராஸாதப்பட்டு,

"யோநித்யமச்யுதபதாமபு ஜயுக் மருக்ம
வ்யாமோஹதஸ் ததி தராணி த்ருணாய மேநே !
அஸ்மத் குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தே ர
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே (ஸ்ரீ வைகுண்டஸ்தவம் -1)

( எவரொருவர் அச்யுதனுடைய திருவடித்தாமரையிணையாகிற பொன்னில் பேராசையாலே, மற்ற பொருள்களைப் புல்லென மதித்தாரோ, என்னுடைய ஆசார்யராய், ஜ்ஞாநாதிகுணபூர்ணராய், கருணைக்கோர் கடலான அத்தகைய ராமாநுஜருடைய திருவடிகளை ஶரணமடைகிறேன்) என்று அநுஸந்தித்துக்கொண்டு பரமபதம் அடைந்தார் கூரத்தாழ்வார்.

### 67) உடையவர் தந்த ஓலைக்கொண்டு திருவேங்கடமுடையான் தயிர் விற்றவளுக்கு வீடு பேறு அளித்தமை

உமக்கு உம்முடையார்க்கும் உபயவிபூதியை ஶ்வர்யத்தையும் தந்தோமென்று நம் தெற்கு வீட்டிலே சொன்னோமே என்று திருப்பவள வாய்திறந்து அருளிச்செய்கையாலும்' உடையவர் திருமலைக்கு எழுந்தருளும் போது ததிவிக்ரயம் பண்ணுமவளான (தயிர் விற்பவளான) தும்பையூர்க் கொண்டியென்பாளொரு கோபாங்கநை (கோபியர் கன்னிகை – தயிர் விற்பவள்) வந்து க்ரய்த்ரவ்யார்த்தமாக (தயிர் பால் கொடுத்தற்கு பணம் வேண்டி நிற்க) உடையவரையும் முதலிகளையும்

ஸேவித்து நிற்க, உடையவர் அவளுக்குத் தளிகை ப்ரஸாதம் ப்ரஸாதிக்கச் சொல்லிக் கிடாம்பியாச்சான்பிள்ளை நியமித்தருளி அவரும் அப்படியே செய்தருள. அவர் ப்ரஸாதித்த ஶ்ரீபாத தீர்த்த தளிகைப்ரஸாதங்களாலே ஸம்யக்ஜ்ஞ நோதய முண்டாய் ( ஞானம் உண்டாக ) அடியேனுக்கு ததிமூல்யம் (தயிருக்கான விலை) தர வேண்டா' மோக்ஷம் தரவேணும் என்று பிரார்த்திக்க, உடையவர் அதற்குத் திருவேங்கடமுடையான் கடவர் என்ன, அவளும் அதற்கு தேவரீர் ஒரு சிறுமுறி (பனை ஓலைச் சீட்டு) தரவேணும் என்ன, உடையவரும் உகந்துதரப் பெற்றுத் திருமலையேறி த்வரித்து வரக்கண்டு திருவேங்கடவர் எதிரே அச்சிறுமுிறயை வாங்கி வாசித்துக்கொண்டு திருநாடு தந்தருளினார்.

*68) அறுசமயச் செடியதனை யடியறுத்தான வாழியே*

இதம் ப்ரதம ஸம்பவசத் குமதி ஜால கூலங்கஷா
ம்ருஷா மத விஷாநல ஜ்வலித ஜீவ ஜீவாதவ
க்ஷரந்த் யம்ருத மக்ஷாம் யதி புரந்தரஸயோக்தய
சிரந்தந ஸரஸ்வதீ சிகுர பந்த ஸைரந்த்ரிகா (யதிராஜ ஸப்ததி –36

புதிது புதிதாய் அவரவர் புத்திக்கு ஏற்றவாறு வேதத்துக்கு முரண்பட்ட பல மதங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இவ்வாறு புதியனவாய்க் கற்பிக்கப்படும் மதங்கள் ஶ்ரீபாஷ்யகாரருடைய ஶ்ரீ ஸூக்திகளால் கண்டிக்கப்பட்டு வேரறுந்துபோம். இன்னும் புதிய மதங்கள் தோன்றினாலும் அவ்றறைக் கண்டிக்கும் முறைகளும் இந்த ஸூக்திகளுள் அடங்கியுள்ளன. மற்றொரு மதம் உண்டு. அது வேதத்தை ஏற்றுக்கொள்வதாய்ப் பாவனை செய்கின்றது. ஆனால் அத்வைத மதம் வேதத்திற்கு உண்மைப் பொருளைக் கொள்வதில்லை. 'ப்ரஹ்மம் ஒன்றே உண்மை வஸ்து மற்ற அனைத்தும் பொய்' என்ற கொள்கையைக் கொண்டதாதலின் அது பொய் மதம் என வழங்கும். விஷம் கலந்த தீபோல அந்த மதம் பலவிடங்களிலும் பரவிப்பல ஜீவாத்மாக்களை நற்கதிபெற வழியின்றித்தடுத்துவிட்டது. உண்மையில்அந்த சேதநர்கள்எம்பெருமானார் ஶ்ரீ ஸூக்திகளின் பொருளை
நன்குஅறிந்தால் அவர்களுக்கு அவை நற்கதிக்கு வழிகாட்டி உஜ்ஜீவிக்கச் செய்யும் மருந்தாய் நிற்கும்.

68ஆ உலகில் அரசமாளிகையில் அரசிக்குத் தலைவாரி அலங்காரம் செய்யும் பணிப்பெண்கள் உண்டு. அவர்கள் அரசியின் கலைந்த கூந்தலை ஒன்று கூட்டி வாரி முடித்து நேர்மையாக்குவார்.ஆநாதியான வேதமென்னும் ஸ்த்ரீயின் கூந்தலாகிய உபநிஷத்துக்களின் வாகயங்களுக்குத் தோன்றியவாறு பொருள்கூறி அலங்கோலப்படுத்தியிருந்தனர் பிறமத்தினர். ஶ்ரீ பாஷ்யம்முதலியஶ்ரீஸூக்திகள் உபநிஷத்தின் வாக்யங்களுக்கு ஒன்றுக்கு ஒன்று முரண்படாத நேரியபொருள்கூறி, முரண்பட்டனவாக மேற்பார்வைக்குத் தோன்றியவிடங்களில் முரண்பாடு இல்லையென விளக்கிக் கூறுகின்றன. இந்த ஶ்ரீஸூக்திகள் எந்நாளும் சாசுவதமான மோக்ஷத்தைப் பெற வழிகாட்டுகின்றன" என்று யதிராஜ ஸப்ததியர் ஶ்ரீ நிகமாந்த தேசிகன் அருளிச்செய்துள்ளார்.

*69) "ஶ்ரீபாஷ்யகாரருடைய ஶ்ரீஸூக்திகளின் பெருமை"*

நிராபாத போதாயந பணிதி நிஷ்யந்த ஸுபகா
விசுத்தோபந்யாஸ வ்யதிபிதுர சாரீரக நயா
அகுண்ட்டைஂ கல்பந்தே யதிபதி நிபந்தா நிஜ முகை

*அநித்ராண ப்ரஜ்  ஞ ா ரஸ தமநி வேதாய ஸுதியாம் (யதிராஜ ஸப்ததி-50)*

*ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸ்ரீ ஸூக்திகளில் அடங்கிய விஷயங்களுள் ஒன்றுக்கொன்று முரண் படுதலும் ப்ரமாணங்களுக்கு முரண்பாடும் சிறிதும் இல்லை. வ்யாஸ பகவான் கண்ட ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்குப்போதாயந பகவான் மிக விரிவான உரையை இயற்றினார். அதைத் தழுவியே ஸ்ரீ பாஷ்யம் அவதரித்தது. ஆதலின் பிறமதத்தினரின் தான் தோன்றியான நூல்கள் போலன்றி வேதாந்திகளான முன்னோர்களின் ஸ்ரீஸூக்திகளைத் தழுவியே ஸ்ரீபாஷ்யகாரர் தம் க்ரந்தங்களை அருளியபடியால் அவை அநுபவிக்க இனியனவாயுள்ளன. அவற்றில் பல்வேறு அதிகரணங்களும் தெளிவான விளக்கத்துடன் நேரிய முறையில் பிரிக்கப்பட்டுள்ளன. அதில் பிறரால் மறுக்க முடியாத பல விஷயங்களைக் கொண்டு புத்திமான்களின் அறிவு நாடியைத் தட்டி அதினின்று அவர்களுக்கு வேதாந்த அறிவை மலரச்செய்து இன்பம் பெருக்குகின்றன. இத் தணைப் பெருமையுடையன ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸ்ரீ ஸூக்திகள்.*

### 70) எம்பெருமானார் அருளிச்செய்த ஒன்பது நூல்கள் (நவரத்னங்கள்)

*எம்பெருமானார் அருளியவை ஒன்பது க்ரந்தங்கள், எல்லாமே வடமொழியில் அமைந்தவை. ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம் வேதாந்தஸாரம் ஆகியவை ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு விவரணமாய் அமைந்தவை. ஸ்ரீமத் பகவத்கீதைக்கு விவரணமாய் அமைந்தது கீதாபாஷ்யம். உபநிஷத்துக ்களின் பொருளை அலசி ஆராய்வது வேதார்த்த ஸங்க்ரஹம். திருவாராதன க்ரமத்தை விவரிப்பது நித்ய க்ரந்தம். எம்பெருமானார் தம் திருவடி ஸம்பந்தம் பெற்றவர்கள் உய்வு பெறுவதற்காக ஒரு பங்குனி உத்தரத் திருநாளில் நம்பெருமாள் பெரிய பிராட்டியாரோடு சேர்த்தியில் எழுந்தருளியிருக்கையில் சரணம் புகுந்த முறையை விவரிப்பவை ஶரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம் என்னும் மூன்று கத்யங்கள். இவற்றுக்குப் பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை மணி ப்ரவாள நடையிலும், ஸ்ரீவேதாந்த தேசிகர் வடமொழியிலும் ்வ்யாக்யானம் அருளிச்செய்துள்ளனர். ஸ்ரீ பாஷ்யத்திற்கு ஶ்ருத ப்ரகாசிகை அருளிய ஸுதர்சனபட்டர் முதல் க்தயமான ஶரணாகதி கத்யத்திற்கு மட்டும் ஶ்ருத ப்ரகாசிகை என்னும் திருநாமத்தோடேயே வடமொழியில் வயாக்யானம் அருளிச்செய்துள்ளார்.*